வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.55/2021

வழக்கு சாட்சி.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆறுமுகம் | ஜாதி: | |
| தந்தை பெயர்: | ராமையா சேர்வை | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது : | 43 /2023 |

(எதிரி ஆஜர் )

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 03.03.2023**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை**

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பெட்ரோல் பங்க் மற்றும் மீன் பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எதிரியை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 3 ஆண்டுகளாக தெரியும். எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது. மதுரையை சேர்ந்த ராஜா முகமது, காரைக்குடியை சேர்ந்த கனகராஜ் மூலமாகத்தான் தெரியும். வழக்கு காசோலை தொகையினை எதிரி என்னிடம் கடனாக பெற்ற தொகைக்காக அளிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இடம் வாங்குவதற்காக தொகை அளித்ததினை பொறுத்து வீட்டில் வரவு செலவு புத்தகத்தில் எழுதி வைத்துள்ளேனா என்றால் எழுதி வைத்துள்ளேன். நீதிமன்றத்தில் எழுதி வைத்துள்ள வரவு செலவு கணக்கினை தாக்கல் செய்வதற்கு ஆட்சேபனை ஏதும் எனக்கு இல்லை என்றால் சரிதான். நான் வருமான வரி கணக்கில் எதிரிக்கு அளித்த தொகையினை பொறுத்து அந்த ஆண்டு கணக்கு காட்டியுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் நான் அனுப்பியது தான் என்றால் ஆமாம். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதியில் நான் எதிரி வீட்டிற்கு சென்று காசோலையினை பெற்றேன் என கூறியுள்ளேனா என்றால் படித்து பார்த்து சாட்சி தனக்கு தேதி தெரியவில்லை என கூறுகிறார்.

2) எந்த இடத்தில் வைத்து மதுரையில் எதிரி காசோலையினை பூர்த்தி செய்து கொடுத்தார் என வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி அவரது வீட்டில் வைத்து எழுதி கொடுத்தார். எதிரி மோசடியாக பணத்தினை பெற்று தரவில்லை என்பதற்காக எதிரி மீதும், அவரது மகன் மீதும் ஆவுடையார்கோவில் காவல் நிலையத்தில் நான் புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரியும், அவரது மகனும் மேற்படி

வழக்கில் பிணையில் வந்த பின்பு தான் இவ்வழக்கு காசோலையின்மீது தவறுகைக்காக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். என்னுடைய மனுவில் எதிரியை எனக்கு அறிமுகப்படுத்திய ராஜா முகமது, கனகராஜினை சாட்சியாக கூறவில்லை என்றால் சரிதான். பதிலறிவிப்பில் எதிரி கூறியுள்ள விபரங்களை முழுமையாக படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். எதிரி காசோலை தொகை ஏதும் தான் பெறவில்லை, திருநெல்வேலியை சேர்ந்த அருள்முருகள் என்கின்ற நல்லகனியிடம் தொகையினை கொடுத்துவிட்டதாகவும், அவர்தான் எனக்கு தராமல் மோசடி செய்துவிட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். மதுரைக்கு எதிரி வீட்டிற்கு யார் யார் சென்றோம் என்றால் நானும், எனது டிரைவரும், டிரைவர் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. அ.சா.ஆ.1 அசல் காசோலையில் பூர்த்தி செய்யப்பட்ட விபரங்கள், எதிரி கையொப்பம் வேறு வேறு மையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் கையெழுத்து எதிரி செய்தார். மற்ற விபரங்கள் நான்தான் பூர்த்தி செய்தேன். அப்போது எதிரி வீட்டில் அனைவரும் இருந்தனர். காசோலையை அதன் உரிமையாளர் மட்டுமே நிரப்பும் உரிமை உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அ.சா.ஆ.2 வங்கி சலான், அ.சா.ஆ.1 அசல் காசோலை இரண்டும் எழுதிய கையெழுத்தானது ஒன்று என்றால் சரிதான். எதிரி மதுரை மாநகர காவல்துறை ஆணையரிடம் என்மீதும், என்னுடன் வந்த நபர்கள் மீதும் நாங்கள் மிரட்டி காசோலையினை பெற்றுசென்றோம் என்று புகார் அளித்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி காசோலையினை எனக்கு அளிக்கவில்லை என்றாலும், காசோலை தொகை எதையும் பெறவில்லை என்றாலும், காசோலையை எனக்கு பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை தொடர்ச்சியானது வேண்டுகோளிற்கிணங்க வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.